20-10-2022 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

## இனிமையான குழந்தைகளே! செல்வம் நிறைந்த தேசமாக இருந்த பாரதமே இப்போது ஏழையாகி உள்ளது, தந்தைதான் இந்த ஏழை பாரதத்தை மீண்டும் செல்வம் மிக்கதாக ஆக்குகிறார்.

கேள்வி: கோப கோபியரான உங்களுக்குள் அனைவரை விடவும் அதிர்ஷ்டம் மிக்கவர் யார் மற்றும் எப்படி?

பதில்: யார் இறை ஞானத்தின் நடனம் ஆடுகின்றனரோ அவர்கள் அனைவரை விடவும் அதிர்ஷ்டம் மிக்கவர்கள், அவர்கள் தான் பிறகு சத்யுகத்தில் சென்று இளவரசன் – இளவரசி யுடன் நடனம் ஆடுவார்கள். அப்படிப்பட்ட அதிர்ஷ்டம் மிக்க குழந்தைகள் இப்போது தந்தை யின் மீது முழுமையாக பலியாகின்றனர், பாபா நான் உன்னுடையவன், என்னுடையது என எதுவும் இல்லை என சொல்கின்றனர். நீங்கள் என்னை சொர்க்கத்தின் எஜமானாக ஆக்குகிறீர்கள் எனும்போது நான் ஏன் பலியாகக் கூடாது!

ஓம் சாந்தி. ஓ பாரதவாசி குழந்தைகளே ! என தந்தை குழந்தைகளுக்கு ஆறுதல் சொல்கிறார், எந்த குழந்தைகள்? தேவதைகளின் பூஜாரிகளாக இருப்பவர்கள். நம்முடைய இஷ்ட தேவ- தேவதைகள் உயர்ந்த தேவதைகளாக இருந்தனர் என நம்புகின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு பூஜை செய்வார்கள். பௌத்தர்கள் புத்தருக்கு பூஜை செய்வார்கள். ஜைனர்கள் மகாவீருக்கு பூஜை செய்வார்கள். அனைவருமே தம் தம்முடைய தர்மத்தின் பெரியவர் களுக்கு பூஜை செய்வார்கள் அல்லது நினைவு செய்வார்கள். தேவி தேவதைகளின் கோவில்கள் உள்ளன. அதில் சிவனின் கோவில் கூட வந்து விடுகிறது. அவர் நிராகாரமானவர். பிரம்மா, விஷ்ணு, சங்கரர் ஆகாரமானவர்கள் (ஒளி உடல் உடையவர்கள்) மற்றும் இலட்சுமி-நாராயணர், சீதா-இராமன், ஜகதம்பா, ஜகத்பிதா சாகாரமானவர்கள் (ஸ்தூல உடலை உடையவர்கள்). இந்த விஷயங்கள் உலகினருக்குத் தெரியாது. ஆக தேவதைகளின் பூஜாரிகளாக இருப்பவர்களுக்கு பாபா சொல்கிறார் - பொறுமையாய் இருங்கள், இப்போது சொர்க்கத்தின் ஸ்தாபனை நடந்து கொண்டிருக்கிறது. பாரதம் சொர்க்கமாக இருந்தது, இலட்சுமி - நாராயணரின் இராஜ்யம் சொர்க்கம் எனப்படுகிறது. இலட்சுமி-நாராயணரின் இராஜ்யத்திற்கு 5 ஆயிரம் வருடங்கள் ஆகின்றன. சீதா-இராமனுக்கு 3750 வருடங்கள் ஆனது என சொல்வோம். இதனை பிரம்மாவின் முகவம்சாவளி பிராமண குல பூஷணர்களாகிய நீங்கள்தான் அறிவீர்கள். உலகில் அனைவருமே அந்தகாரத்தில் (காரிருளில்) இருப்பதால் புத்தியற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் - உங்களுக்கு லௌகிக தந்தை ஒருவர், பரலௌகிக தந்தை ஒருவர் இருக்கின்றனர். அவர் புதிய உலகத்தைப் படைப்பவர். தந்தை புதிய வீடு கட்டு கிறார் அல்லவா. எல்லைக்கப்பாற்பட்ட தந்தை புதிய சிருஷ்டியை உருவாக்குகிறார். இப்போது அந்த பாரதவாசிகள் தர்மத்தில் கீழானவர்களாக ஆகி உள்ளனர். தேவதைகளின் மகிமையைப் பாடுகின்றனர் - அனைத்து குணங்களிலும் நிறைந்தவர். . . இந்த மகிமை வேறு எந்த தர்மத்தவர்களுடையதும் அல்ல. எந்த தர்மத்தவர்களும் தமது இஷ்ட தேவனை இப்படி மகிமை பாடுவதில்லை. அவர்களுக்கு தேவதைகளின் பக்தர்கள் இலட்சுமி - நாராயணரின் கோவில்களில் கிடைப்பார்கள். ஸ்ரீ கிருஷ்ணரின்

பக்தர்கள் கிருஷ்ணரின் கோவில்களில் கிடைப்பார்கள். இலட்சுமி-நாராயணர் பாரதத்தின் எஜமானாக இருந்தனர் என நீங்கள் அறிவீர்கள். அதாவது பாரதவாசிகள் சத்யுகத்தின் எஜமானாக இருந்தனர். பாரதம் மிகவும் பணக்கார தேசமாக, அளவற்ற செல்வங்கள் நிறைந்ததாக இருந்தது. அப்போது ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் இருந்தது. இது பாரதத்தின் பழமையான சகஜ இராஜயோகம் மற்றும் சகஜ ஞானம் ஆகும். தேவி தேவதா தர்மம் பழமையானதாகும். ஆனால் தேவி தேவதைகளின் தர்மத்தை யார் ஸ்தாபனை செய்தது என்பதை மனிதர்கள் மறந்து விட்டனர். நீங்கள் சங்கம யுகத்தின் பிராமணர்கள் என பாபா புரிய வைத்திருக்கிறார். அந்த கலியுகத்து பிராமணர்களும் சொல்கின்றனர் - நாங்கள் பிரஜாபிதா பிரம்மா வம்சத்தவர்கள். ஆனால் பிரம்மா எப்போது வந்திருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாது. இப்போது நீங்கள் நடைமுறையில் இருக் கிறீர்கள். இலட்சுமி நாராயணர் இந்த பாரதத்தில்தான் இராஜ்யம் செய்து சென்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களை விட உயர்ந்த மனிதர்கள் யாரும் கிடயாது. சத்யுகத்திற்கு எத்தனை வருடங்கள் ஆகின்றன என்பது தெரியவே தெரியாது. அவர்கள் சத்யுகத்தின் கால அளவை எவ்வளவு கோடிக் கணக்கில் சொல்லி விடுகின்றனர். சாஸ்திரங்களை உருவாக்கு பவர்கள் தம்முடைய வழிகளை எழுதி விட்டனர். இப்போது தந்தை குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கிறார் - யாரெல்லாம் பாரதத்தின் உண்மையான தேவி தேவதை களாக இருந்தனரோ அவர்கள் பல பிறவிகளின் கடைசி பிறவியில் இங்கே கண்டிப்பாக வர வேண்டும். இந்த வர்ணங்களே பாரதவாசிகளாகிய, தேவி தேவதா தர்மத்தினருடையவை ஆகும். கடைசியில் வரக்கூடிய மற்ற தர்மத்தினருடையவை அல்ல. நீங்கள் இப்போது பிரம்மா வின் வம்சத்தின் பிராமணர்களாக ஆகியிருக்கிறீர்கள். நீங்கள் பூஜாரியிலிருந்து பூஜைக் குரியவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். தாய்மார்களாகிய நீங்கள் பாரதமாதா, சக்தி அவதாரம் என சொல்லப்படுகிறீர்கள். ஜகதம்பாவின் அவதாரம் எனவும் சொல்வோம். சிவபாபா இந்த சங்கமயுகத்தில் அவதாரம் எடுத்திருக்கிறார். உங்களை தம்முடைய குழந்தைகளாக ஆக்கியிருக்கிறார்.

பரமபிதா பரமாத்மா, அனைத்து ஆத்மாக்களின் தந்தையாய் இருப்பவர், அவர் பிரம்மாண்டத்தின் எஜமான் ஆவார். அவரை சிருஷ்டியின் எஜமான் என சொல்ல முடியாது. தந்தையாகத்தான் இருக்கிறார், ஆனால் எஜமானாக ஆவதில்லை. இதுவும் ஆழமான விஷயமாகும். இவர் படைப் பவர் என்றால் படைப்பின் எஜமானாக இருக்க வேண்டும். ஆனால் நான் ஸ்தாபனை செய்யக் கூடிய சொர்க்கத்திற்கு நான் எஜமானாக ஆவதில்லை என பாபா சொல்கிறார். குழந்தை களாகிய உங்களை எஜமானாக உருவாக்குகிறேன். உலகில் அனைவரும் பகவான் சிருஷ்டி யின் எஜமான் என சொல்வார்கள், ஆனால் அவர் படைப்பதற்காக எஜமான். மற்றபடி சொர்க்கத் தின் எஜமானாக உங்களைத்தான் உருவாக்குகிறார். தந்தையின் வேலை குழந்தைகளை தலை மீது ஏற்றுவதாகும் (உயர்வாக்குவது). தந்தை சேவாதாரி அல்லவா. குழந்தைகளுக்கு அனைத்தையும் கொடுத்துவிட்டு சென்று விடுகிறேன். தந்தையும் சொல்கிறார் - உங்களை தகுதி வாய்ந்தவர்களாக ஆக்கி புதிய சிருஷ்டியை படைக்க வைத்து அதன் எஜமானாக ஆக்கி நான் ஓய்வில் சென்று விடுகிறேன். நீங்கள் பிரம்மாண்டத்தின் எஜமான் எனவும் சொல்லிக் கொள்வீர்கள், ஏனென்றால் நீங்கள் பிரம்மாண்டத்தின் எஜமானுடைய குழந்தைகள். நீங்களும் பிரம்ம மகா

தத்துவத்திற்குச் செல்லும் போது பிரம்மாண்டத்தின் எஜமான் என சொல்வீர்கள். அங்கே ஆத்மாக்களாகிய நீங்கள் சைத்தன்யமாகத்தான் இருக்கிறீர்கள், ஆனால் கர்மேந்திரி யங்கள் கிடையாது. பரந்தாமத்தில் இருக்கும் போது பிரம்மாண்டத்தின் எஜமானாக இருக்கிறீர் கள், பிறகு நீங்கள் சிருஷ்டியின் எஜமானாக ஆவீர்கள். பிறகு நீங்கள் இராஜ்ய பாக்கியத்தை இழக்க வேண்டியிருக்கும். இந்த ஞானம் தேவதைகளுக்கோ சூத்திரர்களுக்கோ இருக்க முடியாது. இந்த ஞானம் பிராமணர்களாகிய உங்களுக்கு மட்டுமே இருக்கிறது. பாபா எவ்வளவு ஆழமான விஷயங்களைப் புரிய வைக்கிறார். உங்களுடையதுதான் கதாநாயகன் (ஹீரோ) நடிப்பு உள்ளது. ஜகதம்பா ஞான ஞானேஸ்வரியாக இருக்கிறார், பிறகு இராஜ – இராஜேஸ்வரி யாக ஆகிறார், ததத்வம் (நானே அது, அதுவே நான்). வெறும் 2-4 பேருடைய நடிப்புதான் இருக்கும் என்பதல்ல. சிருஷ்டியின் இராஜ்யத்தை எடுப்பதும், பிறகு பறி கொடுப்பதும் பாரதவாசிகளின் விளையாட்டாக உள்ளது. பாரதவாசிகள்தான் சிருஷ்டியின் எஜமானாக இருந்தனர், இன்று ஏழைகள் ஆகியுள்ளனர். தூய்மையற்ற இராஜாக் களின் இராஜ்யம் கூட இல்லை, பஞ்சாயத்து இராஜ்யம்தான் உள்ளது. தர்மம் சக்தி வாய்ந்தது என சொல்லப் படுகிறது, சர்வசக்திவான் தந்தை அமர்ந்து தேவி - தேவதா தர்மத்தின் ஸ்தாபனையை செய்து கொண்டி ருக்கிறார். எவ்வளவு சக்தியை கொடுத்து விடுகிறார், நாம் சிருஷ்டியின் எஜமானாக ஆகி விடு கிறோம். பாரதத்தில் பல தர்மங்கள் உள்ளன. குஜராத்தில் இருப்பவர்கள் நாங்கள் குஜராத்திகள் என சொல்கின்றனர். சத்யுகத்தில் ஒரே ஒரு தர்மம்தான் இருந்தது. உங்களுக்கு மீண்டும் கீதையின் ஞானத்தை உரைக்கிறேன் என தந்தை சொல்கிறார். வாழும் வரை ஞான அமிர்தத்தைப் பருகுவோம். பல பிறவிகளின் சுமை உள்ளது, அது இறங்க வேண்டும். அவர்கள் யுத்த மைதானத்தைக் காட்டி கிருஷ்ணரின் பெயரைப் போட்டு விட்டனர். உன்னுடைய இரதத்தில் பிரவேசம் செய்து மாயையின் மீது வெற்றி அடையச் செய்வதற்காக யுத்த மைதானத்தில் நிறுத்துகிறேன் என பகவான் சொல்கிறார். கூடவே குழந்தைகளையும் நிறுத்துகிறேன். மாயையை வென்றவராகி சொர்க்கத்தின் எஜமானாக ஆகப் போகிறோம் என நீங்கள் அறிவீர்கள். அவர்கள் பிறகு சிப்பாய்களை குறிப்பிடுகின்றனர், எவ்வளவு இரவுக்கும் பகலுக்குமான வித்தியாசம் உள்ளது. நீங்கள் கோவில்களில் சென்று சேவை செய்ய வேண்டும். இந்த இலட்சுமி நாராயணர்தான் உலகின் எஜமானாக இருந்தனர் என அவர்களுக்குச் சொல்லுங்கள். பிறகு இப்படி ஸ்லோகனை உருவாக்குங்கள் - பாரதவாசிகள் சொர்க்கத்தின் எஜமானாக இருந்தனர். இப்போது ஆஸ்தியை இழந்து விட்டனர். சாஸ்திரங்களில் கிருஷ்ணர் மற்றும் மகாபாரதச் சண்டையைக் காட்டி விட்டனர். பக்தியில் பகவானுடன் சந்திப்பதற்காக சாதனை செய்கின்றனர். வந்து மாயை இராவணனிடமிருந்து விடுவியுங்கள் என அழைக் கின்றனர். எவ்வளவு ஆரவாரங்கள் எழுந்து விட்டுள்ளன. சண்டை தொடங்கி விட்டால் உணவு, உடை என எதுவும் கிடைக்காது. பாம்பே (மும்பை)யை இந்தியாவின் இராணி என சொல்கின்றனர், ஏனென்றால் அவர்களுக்கு சொர்க்கத்தின் சுகத்தைப் பற்றி எதுவும் தெரியாது. நமக்கு தெரியும், எனவே உள்ளுக்குள் நடனமாடிக் கொண்டிருக்கிறோம். ஞானம் சத்கதி எனப்படுகிறது. எந்த ஞானம்? சிருஷ்டியின் முதல் இடை கடைசியின் ஞானம். நாம் எப்படி அனைவருக்கும் புரிய வைக்கலாம் என நீங்கள் இப்போது புத்தியை பயன்படுத்துங்கள். தூய்மையாய் இருந்த தேவதைகள்தான் இப்போது தூய்மையற்றவர்களாக ஆகி விட்டனர், அவர்களைத் தேட வேண்டியிருக்கிறது.

அவர்கள் கோவில்களில் உடனடியாகக் கிடைப்பார்கள், அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள். ஜகதம்பாவின் கோவில் கீழே இருக்கிறது, உண்மையில் (இருவருக்கும்) ஒன்றாக இருக்க வேண்டும். பிரம்மாவின் மகள் முதல் நம்பர் இளவரசியாக ஆவார் என நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ஜகதம்பாவின் 84 பிறவிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி சொல்ல முடியும். நீங்கள் சிவபாபவின் வாழ்க்கை வரலாற்றை அறிவீர்கள். அவர் கல், மண் என அனைத்திலும் இருக்கிறார் என்பதாக அல்ல. முன்னர் நாமும் கூட இப்படி புரிந்து கொண்டிருந்தோம். முன்னர் தன்னைப் பற்றி மிக உயர்வாக புரிந்துக் கொண்டிருந்தோம். அனைத்திலும் உயர்ந்தது ஆபரணங்களின் (ஜுவல்லரி) வியாபாரமாகும். அதனை விட உயர்ந்தது இந்த ஞான இரத்தினங்களின் வியாபாரம் ஆகும். நீங்கள் 9 இரத்தினங்களாலான மோதிரத்தை கூட அணிகிறீர்கள். அதுவும் கூட இதனுடன் ஒப்பிடக் கூடியதே ஆகும். முன்னர் எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

பிரம்மாண்டத்தின் எஜமான் சிருஷ்டியைப் படைப்பவர் பரமாத்மா ஆவார் என்ற முக்கியமான விஷயத்தை இன்று புரிய வைத்தார். அவர் இராஜ்யம் செய்வதில்லை. குழந்தைகளாகிய நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்கிறார். நாம்தான் இராஜ்யத்தை எடுக்க வேண்டும் மற்றும் இழக்க வேண்டும். இதுவும் கூட தெரிந்திருக்க வேண்டும் அல்லவா. இழந்த இராஜ்யத்தில் எத்தனை பிறவிகள் எடுக்கிறோம்? பிறகு தனது இராஜ்யத்தில் எத்தனை பிறவிகள் எடுக் கிறோம்? இன்னும் என்ன வேண்டியிருக்கிறது? மனிதர்கள் தேக அபிமானிகளாக ஆகிய காரணத்தால் தலை கீழாக ஆகிவிட்டனர். நீங்கள் இப்போது நேராக ஆகியிருக்கிறீர்கள். மனிதர்கள் இறக்கும்போது அவர்களுடைய முகத்தைத் திருப்பி வைத்து விடுகின்றனர். இப்போது நம்முடைய முகம் பரமதாமத்தின் பக்கமாக உள்ளது. இந்த சரீரத்தை விட்டு நேராகச் சென்று விடுவோம். நல்லது, தந்தை சொல்கிறார் - மன்மனாபவ. என்னை நினைவு செய்வதன் மூலம் என்னிடம் வந்து விடுவீர்கள். இங்கே எல்லைக்கப்பாற்பட்ட (பரந்த) இடத்தில் வகுப்பு நன்றாக இருக்கிறது. உள்ளே அறைக்குள் பாபாவுக்கு கர்ப்ப ஜெயிலில் இருப்பது போல் தோன்றுகிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தைக்கு எல்லைக்கப்பாற்பட்ட இடம் தேவை. இவ்வளவு உயர்ந்த எல்லைக்கப்பாற்பட்ட எஜமான் இந்த எல்லைக்குட்பட்ட இடத்தில் (சரீரத்தில்) வந்து அமர்கிறார் - உங்களுக்கு சேவை செய்வதற்காக, தூய்மையற்ற சரீரத்தில், தூய்மையற்ற உலகத்தில்தான் இவர் வரவேண்டியுள்ளது. குழந்தைகளாகிய உங்களை தூய்மையற்றவரிலிருந்து தூய்மையானவர்களாக ஆக்கி, சொர்க்கத்தின் எஜமானாக ஆக்கி நான் சென்று விடுகிறேன். இப்போது குழப்பங்கள், சீற்றங்கள் ஏற்பட உள்ளது. பக்குவமற்றவர்களின் உயிர் இவற்றைப் பார்த்த மாத்திரமே பிரிந்து போகும். பிறர் இறந்து போவதைப் பார்த்து பலருக்கு மிகவும் அதிர்ச்சி உண்டாகி இறந்து விடுவார்கள். நீங்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். வேட்டையாடப்பட்ட மிருகத்திற்கு திண்டாட்டம், வேட்டைக்காரனுக்குக் கொண்டாட்டம் என பாடவும் படுகிறது. நாம் இப்போது சொர்க்கத்திற்குத் தகுதி வாய்ந்தவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சண்டையின் மூலமே வாசல் திறக்கிறது என தந்தை சொல்கிறார். விளையாட்டு முடிந்தது, இப்போது திரும்பிச் செல்வோம் வாருங்கள். பாபா ஆன்மீக வழிகாட்டியாக இருக்கிறார், ஆன்மீக தாமத்திற்கு அழைத்துச் செல்கிறார், ஆகையால் இப்போது தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் கடைசி நிலைக்குத் தக்க கதி ஏற்படும். ஒரு

சிலருக்கு இங்கே மிகச் சிறிய பிறவி ஏற்படுகிறது. கர்ப்பத்தில் நிறைய தண்டனைகள் அனுபவிக்கின்றனர். வெளியில் வந்தது, குழந்தை இறந்து போய்விட்டது, பிறகு வேறொரு கணக்கு வழக்கை அனுபவிக்கச் செல்கிறது. இனிமையிலும் இனிமையான குழந்தைகளே, இந்த ஞான இரத்தினங்களை தாரணை செய்யுங்கள் என தந்தை சொல்கிறார். கோவில்களில் சென்று சேவை செய்யுங்கள், இது உழைப்பு எனப்படுகிறது. பயப்படாதீர்கள். யார் நம்முடைய தர்மத்தைச் சேர்ந்தவர்களோ அவர்களுக்கு அம்பு தைக்கும். சன்னியாசி களிடம் சென்று பார்க்க வேண்டும். (தேளின் கொடுக்கினைப் போல) பாருங்கள், கல்லாக இருந்தால் கொட்டாதீர்கள். முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்து செய்து வெற்றி யடைந்தே தீருவீர்கள். இன்னும் அந்த ஞானம் மற்றும் யோகத்தின் சக்தி வரவில்லை, ஆகையால் இன்னும் சன்னியாசிகள், இராஜாக்கள் முதலானவர்களுக்கு எங்கே புரிய வைத்திருக்கிறீர்கள்? ஜனகர், பரிச்சித், சன்னியாசிகள் முதலானவர்கள் அனைவரும் பிற்காலத் தில் வருவார்கள். அவர்களுக்கு ஞானம் கொடுத்தீர்கள் என்றால் பிறகு அதனுடைய தாக்கம் ஏற்படும். பிறகு அந்த சமயத்தில் நீங்கள் சொல்வீர்கள் - டூ லேட் (மிகவும் கால தாமதமாகி விட்டது) பையை நிரப்ப பாபா வந்திருந்தார், ஆனால் நீங்கள் வரவேயில்லை. எப்படி சேவை செய்ய வேண்டும் என எப்போதும் சிந்தனை செய்யுங்கள். அழைப்பிதழ்களை அச்சிடுங்கள். யுக்திகளை வெளிப்படுத்துங்கள். சேவையும் கூட நாடகத்தின்படிதான் நடக்கிறது. நாம் சாட்சியாகி பார்க்கிறோம். பகவானுடைய மகா வாக்கியம் - குழந்தைகளுக்கு, கோப கோபியர்களுக்கு. கோபி வல்லபர் பகவான் ஆவார். அவர் தந்தை ஆவார். கோப கோபியர்கள் அனைவரும் இங்கேதான் உள்ளனர். சத்யுகத்தில் இருக்க மாட்டார்கள். இது இறை ஞானத்தின் நடனம். பிறகு அங்கே சென்று இளவரசன், இளவரசியுடன் நடனம் ஆடுவீர்கள். குழந்தை களாகிய நீங்கள் மிகவும் அதிர்ஷ்டம் மிக்கவர்கள், பலி மட்டும் ஆகி விடுங்கள். பாபா நான் உங்களுடையவன், ஏன் பலியாக மாட்டேன். நீங்கள் என்னை சொர்க்கத்திற்கு எஜமானாக ஆக்குகிறீர்கள். உயர்ந்த கிடைடத்தற்கரிய வருமானம் ஆகும். மற்ற அனைத்தும் சுடுகாடாக ஆகவுள்ளது. சுடுகாடு பிறகு பரிஸ்தானமாக (சொர்க்கமாக) ஆகப் போகிறது. டில்லி முன்னர் பரிஸ்தானமாக இருந்தது, பரிகளின் (தேவதைகளின்) ஸ்தானமாக (இடமாக) இருந்தது. தேவி தேவதைகள் பரிஸ்தானத்தின் பரிகள் எனப்படுகின்றனர். இப்போது சுடுகாடாக உள்ளது. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நாம் பிரம்மாண்டம் மற்றும் உலகின் எஜமானாக ஆகிக் கொண்டிருக்கிறோம் பிராமணர்களாகிய நாம்தான் பிறகு தேவதைகளாக ஆகப் போகிறோம் என்ற பெருமையில் எப்போதும் இருக்க வேண்டும்.

2. தனது நிலையை மிகவும் உறுதியாக ஆக்க வேண்டும். மரணத்தைக் கண்டும் கூட பயப்படக் கூடாது. தந்தையின் நினைவில் இருக்க வேண்டும். தாரணை செய்து மற்றவர்களுக்கும் சேவயை செய்ய வேண்டும்.

வரதானம் குட்டிகரணம் என்ற விளையாட்டை முடிக்கக் கூடிய மாஸ்டர்

: வள்ளல் தன்மையுடைய சுயமரியாதையுடைவர் ஆகுக.

எந்த குழந்தைகள் குட்டிகரணம் என்ற விளையாட்டை விளையாடுகிறார்களோ, அவர்கள் அப்படி நடக்க வில்லையென்றால், இப்படி நடந்திருக்காது என்று சொல்வார்கள். இவர்கள் இப்படி செய்தார்கள், சூழ்நிலைகள் மற்றும் வி^யங்கள் அப்படி இருந்து இப்பொழுது இதுபோன்ற குட்டி கரணத்தின் புலம்பலான வார்த்தைகளை முடித்து விட்டு, அப்படியிருந்தாலும் சரி, இப்படி இருந்தாலும் சரி, ஆனால் நான் பாபாவிற்கு சமமாக ஆக வேண்டும் என்று உறுதிமொழி செய்யுங்கள். மற்றவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தார்கள் என்றால் நான் சம்பன்னம் (முழுமை யானவர்) ஆகிவிடுவேன், அவ்வாறு அல்ல. இவ்வாறு பெற்றுக்கொள்வதற்கு பதிலாக மாஸ்டர் வள்ளலாகி சகயோகம், அன்பு, கருணையோடு இருப்பது தான் பெறுவதாகும். இந்த உணர்வினால் மாஸ்டர் வள்ளல் தன்மையின் சுயமரியாதையுடைவர் ஆகி விடுங்கள்.

சுலோகன்: நான் மற்றும் என்னுடையது என்ற உணர்வுகளிலிருந்து வைராக்கியம் வரும் பொழுது தான் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் என்று சொல்ல முடியும்.